QB365 Student Learing Managemnet System
Exam Name: மாதிரிக் காலாண்டுத் தேர்வு
Std: 9th Standard - Tamil
Chapter: அமுதென்று பேர் - திராவிட மொழிக்குடும்பம், அமுதென்று பேர் - தமிழோவியம், அமுதென்று பேர் - தமிழ்விடு தூது, உயிருக்கு வேர் - நீரின்றி அமையாது உலகு, உயிருக்கு வேர் - புறநானூறு, உள்ளத்தின் சீர் - ஏறு தழுவுதல், உள்ளத்தின் சீர் - மணிமேகலை, உள்ளத்தின் சீர் - திருக்குறள், உள்ளத்தின் சீர் -கற்கண்டு (இலக்கணம்) - தொடர் இலக்கணம், ஆகுபெயர், உள்ளத்தின் சீர் -விரிவானம் (துணைப்பாடம்) - தாய்மைக்கு வறட்சி இல்லை!, உள்ளத்தின் சீர் -கவிதை பேழை (செய்யுள்) - மார்கழி பெருவிழா

Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக

1. 1 சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தெளிலீஸ்வரன் அணையைக் கட்டினார்
   2 மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தான்
   3 மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றது
   4 நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கின்றனர்
   5 சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பித்தான்

பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க

2. 1 நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல நல்லோர்க்குப் பெய்கிற மழையானது எல்லோருக்கும் கிடைக்கிறது
   2 தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும் என்பது போலப் பெற்றோரின் அறிவுரையோ கடுஞ்சொல்லோ எதுவானாலும் அது பிள்ளைகள் நல்ல வழியில் வாழ வழிவகுக்கும்
   3 மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும் என்பது போல எந்த ஒரு செயலையும் பதறாது நிதானமாகச் செய்தால் வெற்றி கிடக்கும்
   4 கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது என்பது போலத் தாய் தந்தையரின் சொத்துக்கள் என்றானாலும் அவைகள் பிள்ளைகளுக்குத்தான். அதற்கு முன்பு சொத்தைப் பங்கு வை, பாகம் பிரி என்று பெற்றோரைப் புண்படுத்தக் கூடாது

அகராதியில் காண்க

3. 1 ஒலித்தல், தழைத்தல், கட்டுதல், மிகுதல்
   2 தகுதி, ஏற்றது, உடன்பாடு
   3 ஒலி
   4மின்னல், மனத்திட்ப மற்றவள்
   5 கசத்தல்

மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக

4. 1. மழை தொடர்ந்து பெய்தமையால் சாலைகள் மேடும் பள்ளமுமாக மாறிவிட்டன
   2. இராமனும் இலக்குவனும் நகமும் சதையும் போல இணைபிரியாது வாழ்ந்தனர்
   3. இதுவே முதலும் முடிவுமாக இருக்க வேண்டும் என்று அருணை அவன் பெற்றோர்கள் கண்டித்தனர்
   4.எங்கள் பள்ளியில் நடந்த கலைநிகழ்ச்சி கேளிக்கையும் வேடிக்கையும் நிறைந்ததாக இருந்தது
   5.தாய் தனது குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தாள்

நயம் பாராட்டுக

5. குறிப்புச் சட்டகம்
   1 முன்னுரை
   2 திரண்ட கருத்து
   3 பொருள் நயம்
   4 தொடை நயம்
   5 அணி நயம்
   6 முடிவுரை

1 முன்னுரை:
'அழகின் சிரிப்பாக' இயற்கை எழிலினைப் பற்றி புலவர் ம.இலெ.தங்கப்பா அவர்கள் பாடிய இப்பாடல் மிகவும் சிறப்பானது. இயற்கை அழிக்கப்பட்டு வரும் இக்காலச் சூழலில் இப்பாடல் மலரும் நினைவாக இயற்கையின் அழகை படம் பிடித்துக் காட்டுகிறது.

2 திரண்ட கருத்து :
"தென்னைக்கு அழகு குருத்து
பாடலுக்கு அழகு கருத்து"
காலைக்கதிரவன் தோன்றும் தொடுவானின் அழகு, அழகான கடற்மணல் பரப்பு வானைத் தொடுகின்ற உயர்ந்த மலை, பள்ளத்தாக்கில் அழகாகப் பாய்ந்து வரும் அருவியின் அழகு, அழகான காடு, பச்சைப் பசேலென எங்கும் பரவி கிடக்கும் புல்வெளி தலையசைக்கும் வயல்வெளி, நடமாடும் விலங்குகளின் ஆர்ப்பரிப்பு என காண்கின்ற பொருள்களின் அழகைவிட என் நெஞ்சத்தைத் தொட்டது நுண்மையான பாட்டே இப்பாடல் தூய்மையான ஊற்று. அழகான பேரொழுங்கி! என் உடலே! மக்கள் மனதினுள் நீ குடியிருக்க வேண்டும். என்று வேண்டிகிறேன் என்று கருத்தாழமிக்க பாடலைப் புலவர் தந்திருப்பது பாராட்டிற்குரியது.

3 பொருள்
"வாழ்க்கை சிறக்கத்தேவை பொருள்
பாடல் பிறக்கத்தேவை பொருள்"
என்பதற்கேற்ப இப்பாடலில்
நெடுவான் - பெரியவானம்
பொழில் - அழகு
நெஞ்சில் - மனதில்
மெய் - உடல்
பெருமலை - உயர்ந்த மலை
நல்வயல் - நல்ல வயல்
பேரொழுங்கி - பெருமை பெற்ற அழகே
அகம் - உள்ளம்
போன்ற நயமிக்க சொற்களைப் பொருள்பட புலவர் படைத்திருப்பது பாராட்டுதற்குரியது

4 தொடை நயம் :
"தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்"
என்பதற்கேற்ப இப்பாடல், மலர்மாலைப் போன்று தொடை நயங்களால் தொகுக்கப்பட்டுள்ளது.

அ) மோனை நயம்
"மன்னுக்குத் தேவை சேனை
பாடலுக்குத் தேவை மோனை"
முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.
விரிகின்ற - விண்ணோங்கு; தெரிகின்ற -தெவிட்டாத; அழகு -அகத்திலும்; பொழிகின்ற - புனலருவி - பொழிலில்; புல்வெளியில் - புள்ளில்

ஆ) எதுகை நயம்
"மதுரைக்கு அழகு வைகை
பாடலுக்கு அழகு எதுகை"
இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.
புல்வெளியில் - நல்வயலில் - விலக்கில்; விரிகின்ற - தெரிகின்ற; பொழிகின்ற - பொழிலில்; தெரிகின்ற - பொருளிலெல்லாம்

இ) இயைபு நயம்:
செய்யுளில் கடைசி எழுத்தோ, சீரோ ஆசையோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபு ஆகும். இப்பாடலில் அடிகள்தோறும் ஈற்றுச்சீரின் ஈற்றேழுத்து ஒன்றிவர அமைந்துள்ளது
கடற்பரப்பில்; பள்ளத்தாக்கில்; காட்டில்; புள்ளில்;' நெஞ்சில்

5 அணி நயம்:
"அணியற்ற பாடல் அழகாற்றுப் போகும்"
என்பதற்கேற்ப இப்பாடலில், உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது.

6 முடிவுரை:
இறைவனின் படைப்பின் அழகைப் புலவர் அழகாக பாடியுள்ளது பாராட்டுதற்குரியது. இப்பாடலில், புலவர் அழகுமிகு சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பாடி இருப்பது மிகவும் சிறப்புமிக்கது

6. குறிப்புச் சட்டகம்

1 திரண்ட கருத்து
2 மையக்கருத்து
3 தொடை நயம்
4 சொல் நயம்
5 சுவை நயம்
6 அணி நயம்

1 திரண்ட கருத்து:
கல்லையும் மலையையும் குதித்து; பெரிய காடுகளையும் செடிகளையும் கடந்து; பரந்து விரிந்த சமவெளி எங்கும் நான் இறங்கித் தவழ்ந்து வந்தேன். எற முடியாத பல மேடுகள் ஏறி; பல ஏரி குளங்களை நிரப்பி வந்தேன். ஊறாத ஊற்றிலும் உட்புகுந்து; மணல் ஓடைகள் பொங்கிட ஓடி ஆறாக பாய்ந்து வந்தேன் என்று ஆற்றின் பயணத்தை அழகாக வர்ணித்துள்ளார் கவிமணி.

2 மையக்கருத்து :
மலையினின்று புறப்பட்ட ஆறொன்று பாய்ந்து வந்த விதத்தையும் அவை வளப்படுத்திய பகுதிகள் குறித்தும் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ளன

3 தொடை நயம் :
"தொடையற்ற பாட்டு
நடையற்றுப் போகும்" - என்பதற்கிணங்க இப்பாடல் மலர்மாலை போன்று தொடை நயங்களால் தொகுக்கப்பட்டுள்ளது

அ) மோனை நயம்:
"மன்னனுக்குத் தேவை சேனை
பாடலுக்குத் தேவை மோனை"
முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும்.
கல்லும் - காடும்; ஏறாத - ஏரி; ஏறாத - எறிவந்தேன்; ஊறாத - ஊற்று ஓடை - ஒடி வந்தேன்; எல்லை - எங்கும்

ஆ) எதுகை நயம் :
"மதுரைக்கு அழகு வைகை
பாடலுக்கு அழகு எதுகை"
இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகை ஆகும்.
கல்லும் - எல்லை; கல்லும் - மலையும்; ஏறாத - எறிவந்தேன்; உறாத - ஊற்றிலும்; எங்கும் - பொங்கிட

இ) முரண் நயம் :
"முரண் இல்லாப்பாட்டு
அரண் இல்லாக் கோட்டை போன்றது"
ஒரு செய்யுளில் எதிர் எதிரான பொருள்தரும் சொற்கள் வருவதும், செய்யுளில் மாறுபட்ட கருத்துகள் பயின்று வருவதும் முரண் ஆகும்.
ஏறி x இறங்கி

QB 365 Study Material
QUESTION BANK 365

4 சொல் நயம் :
எண்ணும்மைகளையும் முரண்களையும் கொண்டு சொற்களை நயமாக இப்பாடலில் கையாண்டுள்ளார் கவிஞர்
கல்லும் - மலையும்; காடும் செடியும்;. ஏறாத x ஏறி.

5 சுவை நயம் :
"விற்கு அறுசுவை
பாவிற்கு எண்சுவை"
என்பதற்கேற்ப இப்பாடலில் தவழ்ந்து தவழ்ந்து போன்ற அடுக்குத் தொடரால், சந்தச் சுவைகள் பல மலிந்து கிடக்கின்றன.

6 அணி நயம் :
"அணியற்ற பாடல் அழகற்றுப் போகும்" என்பதற்குகேற்ப இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி அமைந்துள்ளது.

கடிதம்

7. வரவேற்பு மடல்
நாள் : 10.08.2025
இடம் : அரசு மேல்நிலைப்பள்ளி பாளையங்கோட்டை
நேரம் : மாலை3.00 மணி
சிறப்பு விருந்தினர் : மாவட்டக் கல்வி அலுவலர்

சுற்றுச்சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளில் மாவட்டத்திலேயே முதலிடம் பெற்ற பாளையங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளியின் பாராட்டு விழாவிற்கு வருகை தரும் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களே! வருக! வருக!
சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் 'தூய்மை பாரதம்' எனும் திட்டத்தை நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் கடந்த 2014-ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்
அதனை வலியுறுத்தி நமது மாவட்டக் கல்வி அலுவலரும் அனைத்துப் பள்ளிகளுக்கும் 'தூய்மை பாரதம்' பற்றிய சுற்றறிக்கையை அனுப்பினார். அதனைப் பின்பற்றி எங்கள் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களின் உதவியுடன் பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளை சுத்தமாக வைத்துக் சொல்வதோடு பள்ளி வளாகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டும் அவற்றைப் பராமரித்தும் வருகிறோம். மேலும் 'தூய்மை' பற்றிய விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகிறோம்
இவ்வாறு சுற்றுச்சூழலைப் பேணிகாக்கும் வகையில் திறம்பட செயல்பட்டதால் சுற்றுச்சுழல் பாதுகாப்பில் எங்கள் பள்ளி மாவட்டத்திலேயே சிறந்த பள்ளியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது
இவ்விழாவினில் கலந்து கொண்டு பரிசளிக்க வருகை தரும் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களை அன்புடன் வரவேற்கிறோம்

இங்ஙனம்,
அரசு மேல்நிலைப்பள்ளி
ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்.

இடம் பாளையங்கோட்டை
நாள் : 12.08.2025

நெடுவினா

8. குறிப்புச் சட்டகம்

1 முன்னுரை
2 வறுமையும் பிரியாணியும்
3 பிள்ளைகளின் பசி
4 வறுமைத்தாயின் ஏற்பு
5 தாயுள்ளம்
6 முடிவுரை

1 முன்னுரை:

கருநாடக மாநிலத்தின் குல்பர்கா நகரைத் தாண்டிய தேசிய நெடுஞ்சாலையில் ஒரு தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தின் அருகே குடிசையில் ஒரு குடும்பம் வாழ்ந்து வந்தது. அக்குடும்பத்தலைவி அழுக்காடை உடுத்து இருந்தாள் அவள் அருகில் இரண்டு சாம்பல் நிற நாய்க்குட்டிகளும், மூன்று வயதுப் பெண்குழந்தை மற்றும் ஒரு வயதுக் குழந்தையும் இருந்தது. பஞ்சத்தால் அவர்கள் வறுமையில் இருந்தனர்.
அந்த வழியாக ஜிப் ஒன்று வேகமாக இடிப்பதைப் போல வந்தது. பயந்த அவள் உருண்டு தனது கணவனை பாதுகாத்துக் கொண்டாள். ஜிப் புழுதி பறக்க நின்றது.

2 வறுமையும் பிரியாணியும்:

ஜிப்பின் முன் இருக்கையில் இருந்து குதித்த ஒருவரை, பின்னால் இருந்து குதித்தவர்கள் பயபக்தியுடன் சூழ்ந்திருந்தார்கள். ஜிப்பில் வந்த அதிகாரி அவர்களோடு வந்தவர்களுக்குப் பிரியாணியை வாழையிலையில் கொடுத்தார். அப்போது, மண்பானைத் தண்ணீரை அங்கே கொண்டு வந்த தோட்டாக்காரன், அதைத் தரையில் இறக்கி வைத்துவிட்டுத் திரும்பிப்பாராமல் நடந்தபோது, அந்த அதிகாரி அவனைத் தன்னருகே வரும்படி சைகை காட்டினார். உடனே பியூன் பாதி பிரியாணியோடு அந்தத் தட்டை எடுத்து அவனிடம் நீட்டினார்.
தோட்டக்காரன் அதைத் தயங்கித் தயங்கி வாங்கி மற்றவர்கள் தட்டில் பரிமாறப் போனபோது அந்த அதிகாரி அவன் தோளைத் தட்டிக்கொடுத்தார் .
இலையிலிருந்த ஒரு முட்டையை எடுத்து அந்த சைவப்பிரியாணிக்கு வெள்ளை மகுடம் சூட்டி, இதர வகையாறாக்களையும் அதில் அள்ளிப்போட்டு, அவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத்த தள்ளினார். அதை எடுத்துக் கொண்டு மனைவியை நோக்கி நடந்தான்.

QUESTION BANK 365 Study Material

3 பிள்ளைகளின் பசி:

அவள் அவனைக் கண்களால் கண்டித்தாள். "வறுமையிலும் தன்மானம் பெரிது" என்பதைத் தாய் தன் செய்கையால் உணர்த்தினாள். பிள்ளைகளின் பசி அவர்களின் கண்களில் மலர்ந்திருந்ததைக் கண்டாள். தாம் சமைத்த கனமான சப்பாத்தியோடு பிரியாணியையும் உருளைக்கிழங்குப் பெரியலையும் சேர்த்துக் கொடுத்தாள். காணாததைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் அவர்கள் அதை மெல்ல மெல்ல சுவைத்தார்கள். நாய்களுக்கும் அவ்வப்போது கவலங்களைப் போட்டாள்.

4 வறுமைத்தாயின் ஏற்பு:

மீதமிருந்த பிரியாணியை தாய் உண்ண முயன்றாள். உலர்ந்துபோன தொண்டைக்குழி அதனை ஏற்கவில்லை. அதனைக் கண்ட அதிகாரி தன் கைகளால் தண்ணீர் கொடுத்தார் "உன்னை மாதிரியே கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத்தான் அம்மா பிறந்தேன்" என்றால். "உன்னை என் தாயாக நினைத்துத்தான் கொடுக்கிறேன்" என்றதும் அவரின் மனிதநேயம் அவளுக்குப் புரிந்தது.
நாய்க் குட்டிகள் அதிகாரியின் கால்களைச் சுற்றி வந்தன. தட்டில் இருந்த உணவினை நாய்க்குட்டிகளுக்கு அளித்தார். ஆனால் நாய்க்குட்டிகள் அவரை விடவில்லை. நாய்குட்டி மீது அவள் கல் எறிந்தாள். அடிபட்ட நாய்க்குட்டி திராட்சை தோட்டத்திற்குள் ஓடியது. பின்னர் அதன் ஓல ஒளி மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

5 தாயுள்ளம்:

தட்டில் உள்ள உணவை அவள் உண்ணத் தொடங்கினாள். நாயின் ஓலஒலி அவளைச் சுண்டி இழுத்தது. வேகமாய் எழுந்து சென்று அந்த நாய்க்குட்டியை வாரி எடுத்தாள் அதன் முதுகைத் தடவிவிட்டாள். தன்மடியில் போட்டுத் தாலாட்டினாள். தட்டில் இருந்த உணவைச் சிறுசிறு கவளமாய் உருட்டி ஊட்டிவிட்டாள். அவள் கையிலிருந்த கவளத்தைக் கவ்விக்கொண்ட நாய்க்குட்டி தந்து பசியைப் போக்கிக் கொண்டது. அந்தத் தட்டில் இருத்த உணவு குரைக்குறைய அவள் தாய்மை கூடிக்கொண்டே இருந்தது.

6 முடிவுரை:

எது வறண்டாலும் மனிதம் வறண்டுவிடக் கூடாது என்பதை இக்கதை சுட்டுகிறது. உயிர்கள் மீது அன்புகாட்டும் எண்ணம் தாய்மைக்கே அதிகம் உண்டு என்ற எண்ணத்தில் படைக்கப்பட்டுள்ளது இந்தத் தாயின் பாத்திரப்படைப்பு. தாய்மை வழியே மனிதம் காக்கப்பட்டதை

தாய்மைக்கு வறட்சி இல்லை என்ற சிறுகதை வாயிலாக சு.சமுத்திரம் அவர்கள் உணர்த்தியுள்ளார்.
"தாயிற்சிறந்த கோவில் இல்லை"

சிறுவினா

9. **எண்ணலளவை ஆகுபெயர்:**
எ.கா.: ஒன்று பெற்றால் ஒளிமயம்.
ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்ததால் இது எண்ணலளவை ஆகுபெயர் ஆகும்.
எடுத்தலளவை ஆகுபெயர்:
எ.கா.: இரண்டு கிலோ கொடு. நிறுத்து அளக்கும் எடுத்தல் என்னும் அளவைப் பெயர், அவ்வளவியுள்ள பொருளுக்கு ஆகி வந்ததால் இது எடுத்தலளவை ஆகுபெயர் ஆகும்.
முகத்தலளவை ஆகுபெயர்:
எ.கா.: அரை லிட்டர் வாங்கு.
முகந்து அளக்கும் முகத்தல் அளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்ததால் இது முகத்தலளவை ஆகுபெயர் ஆகும்.
நீட்டலளவை ஆகுபெயர்:
எ.கா.: ஐந்து மீட்டார் வெட்டினான்.
நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவைக்கொண்ட பொருளுக்கு ஆகி வந்ததால் இது நீட்டலளவை ஆகுபெயர் ஆகும்.

பகுபத உறுப்பிலக்கணம்

10. கொடு + த் + த் + ஓர்
கொடு - பகுதி
த் - சந்தி
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி
த் - இறந்தகால இடைநிலை
11. அறைந்தனன் - அறை + த் (ந்) + த் + அன் + அன்
அறை - பகுதி
த் - சந்தி - த், ந் ஆனது விகாரம்
த் இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

இலக்கணக் குறிப்பு

12. தொழிற்பெயர்
13. வினைத்தொகை
14. ஏவல் வினைமுற்றுகள்
15. வினைத்தொகை

QB 365 Study Material
QUESTION BANK 365

3 Marks

16. **திராவிட மொழிகள்:**
திராவிட மொழிக்குடும்பம். நில அடிப்படையில் மூன்று வகைப்படும்.
1. தென் திராவிட மொழிகள்
2. நடுத்திராவிட மொழிகள்
3. வடதிராவிட மொழிகள்
இவற்றுள் எனக்குத் தெரிந்த மொழிகள் தமிழ், மலையாளம் ஆகும். அவற்றின் சிற ப்பியல்புகளைக் காண்போம்.
தமிழ்மொழி:
1. பல உலக நாடுகளில் பேசப்படும் மொழியாகவும் சில நாடுகளில் ஆட்சி மொழியாகவும் தமிழ் திகழ்கிறது.
2. திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழ்.
மலையாளம்:
1. இனிமையும், இலக்கண வளமும் நிறைந்தது மலையாளம்.
2. அற இலக்கியங்களால் வளமிக்க மொழியாக. மெல்லினச் சொற்கள் பேச்சு வழக்கில் மிகுந்து காணப்படும் மொழி மலையாளம்.
17. "குறைகள் சொல்வதை விட்டு விட்டுப் புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்".
குறைகளைப் பேசுவது மனிதனின் செயல்பாடுகளுள் ஒன்று. ஆனால் நிறைகளைக் காணாமல் குறைகளைப் பேசுவது மனித மனங்களைக் காயப்படுத்தும். அதனால் நிறைகளைப் பேசி புதுக்கோலம் புனைந்து வாழ்வோம்.
18. 1. நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்றவேண்டும்.
2. குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைப் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.
3. தண்ணீர்ச் சிக்கனமே நீர்ப் பாதுகாப்பின் முதல் படி.
4. ஒழுகும் குழாய்களை மூடுவதையும், நிலத்தடி நீரை அளவோடு செலவழிப்பதையும் கடமையாகக் கொள்ள வேண்டும்.
5. நெகிழிக் குப்பைகளை அனைத்து இடங்களிலும் போடுவது. நீர் நிலத்தினுள் புகா வண்ணம் அடைப்பை ஏற்படுத்தும். எனவே இதனைத் தவிர்க்கவேண்டும்.
6. மழை நீரை நிலத்தடியிலும், நீர்நிலைகளிலும் சேமித்து வைக்கவேண்டும்.
19. 1. நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது; உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.
2. நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர், இவ்வுலகில் உடலையும், உயிரையும் படைத்தவர் ஆவர்.
3. அதனால் ஏரி. குளம் மற்றும் குழிந்த இடங்கள் தோறும் நீர்நிலைகளைப் பெருகச் செய்தல் வேண்டும். இவ்வாறு நிலத்துடன் நீரைப் பெருக்கி வளப்படுத்துபவர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர்.
20. 1. ஏறு தழுவுதல் மருதத்திணையோடு பின்னிப் பிணைந்த பண்பாடு மிக்கது.
2. உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப்பொங்கல்.

3. அவ்விழாவன்று மாடுகளைக் குளிப்பாட்டி, அலங்கரித்து, பூமாலை அணிவித்துத் தளிகைப் பொங்கலை ஊட்டி விடுவர்.
4. வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

21. **தோரணங்கள்**
1. தெருக்களில் தோரணம் கட்டி அழகுபடுத்துவது குலைமுற்றிய பாக்கு மரங்கள், வாழை மரங்கள் பூங்கொடிகள் போன்றவற்றை நம் ஊர் விழாக்களிலும் ஏற்படுத்துவர்.
2. வீடுகளின் முன் தெருத் திண்ணைகளில் வரிசை வரிசையாக மாலைகளைத் தொங்கவிட்டு அலங்காரம் செய்வார்கள்.
விழா நிறைந்த ஊர்
தெருக்களிலும் மன்றங்களிலும் புதிய மணலைப் பரப்புவார்கள். கொடிகளால் அழகுபடுத்துவர். கம்புகளில் கொடிகளைக் கட்டுவர்.

2 Marks

22. 1. தென் திராவிடம் என்ற இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.
2. தென் திராவிடம் சார்ந்த தமிழ்மொழியை நாம் பேசுகிறோம்.
3. தொன்மையும் இலக்கிய, இலக்கண வளமும் உடைய மொழி தமிழ்.
4. சில திராவிட மொழிகளின் தாய்மொழியாகத் தமிழ் கருதப்படுகிறது.

23. 1. விரலை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று சொல்வது போல் பிறரைக் குறை சொல்வதை விட்டுவிட்டுப் புது வடிவெடுத்து அனைவரும் தமிழை வளர்ப்போம்.
2. இயல்தமிழாய், இசைத்தமிழாய், நாடகத்தமிழாய் இருந்த முத்தமிழ் இன்று அறிவியல் தமிழாய், கணினித்தமிழாய், இணையத்தமிழாய் புதுக்கோலம் கொண்டு வளர்ந்து வருகிறது.
3. மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை ஆகிய துறைகளில் புதிய புதிய சொற்றொடர்களை நாம் உருவாக்கி தமிழை வளர்த்து வருகிறோம்.

24. 1. எதுகை, மோனை, ஓசை நயத்துடன் இசைப்பாடல் வடிவில் இரண்டிரண்டு அடிகளால் பாடப்படுவது கண்ணியாகும்.
2. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.

25. 'கூவல்' என்று அழைக்கப்படுவது உவர் மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை என்பதாகும்.

26. 1. குளம்
2. ஏரி
3. கால்வாய்
4. கிணறு, ஊருணி, கண்மாய்

27. 1. நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது. உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.
2. இப்பாடல் அடிகள் குடபுலவியனார் எழுதிய புறநானூற்றுப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

QB TM 365 Study Material
QUESTION BANK 365

28. 1. எருது கட்டி
2. மாடு பிடித்தல்
3. காளை விரட்டு
4. .மாடு அணைதல்
5. ஏறு விடுதல்
6. மாடு விடுதல்
7. சலிக்கட்டு
8. மஞ்சு விரட்டு
9. வேலி மஞ்சு விரட்டு
என ஏறு தழுவுதல் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

29. தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரிடம் பொறுமை காக்க வேண்டும்.

30. தீயவை தீயவற்றையே தருதலால் தீயை விடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்ச வேண்டும்.